

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.08.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 63 நபர்களுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் 55 வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தலைவர் ப.ரங்கநாதன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரதா சாகு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் அ. ஜான் லூயிஸ், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர். ஜெ.விஜயா ராணி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (22.8.2025) தலைமைச் செயலகத்தில், கேரள மாநில கூட்டுறவு, துறைமுகங்கள் மற்றும் தேவசம் போர்டு அமைச்சர் வி.என். வாசவன் சந்தித்து, திருவிதாங்கூர் தேவசம் போர்டு பவள விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று அழைப்பு விடுத்தார். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், தேவசம் போர்டு, வருவாய் மற்றும் உணவுத் துறை செயலாளர் எம்.ஜி. ராஜமாணிக்கம், திருவிதாங்கூர் தேவசம் போர்டு ஆணையர் பி. சுனில் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## பழமையான 9 திருக்கோயில்கள் புனரமைக்கும் பணி தொடக்கம் 14 முடிவுற்ற கட்டுமானப் பணிகள் திறப்பு!

# இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.124.97 கோடியில் 17 புதிய திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக. 23-

**இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.124.97 கோடி மதிப்பீட்டிலான 17 புதிய திட்டப் பணிகளுக்கான கட்டுமானப் பணிகள் மற்றும் ரூ.32.53 கோடி மதிப்பீட்டில் ஆயிரம் ஆண்டுகள் பழமையான 9 திருக்கோயில்களை புனரமைக்கும் பணிகளை தொடங்கி வைத்து, ரூ.51.19 கோடி செலவிலான 14 முடிவுற்ற கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.08.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 124 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12 திருக்கோயில்களில் 17 புதிய திட்டப் பணிகளுக்கான கட்டுமானப் பணிகள் மற்றும் 32 கோடியே 53 இலட்சம் மதிப்பீட்டில் ஆயிரம் ஆண்டுகள் பழமையான 9 திருக்கோயில்களை அதன் பழமை மாறாமல் புனரமைக்கும் வகையிலான திருப்பணிகளையும் தொடங்கி வைத்து, 51 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் 11 திருக்கோயில்களில் 14 முடிவுற்ற பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்குகள் நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், ஒரு கால பூஜை திட்டம் விரிவாக்கம், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல், அன்னதானத் திட்டம் விரிவாக்கம், கிராமப்புற மற்றும் ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில் திருப்பணிகளுக்கு நிதியுதவி வழங்குதல், துறையின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. மேலும், சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

**12 திருக்கோயில்களில் 17 புதிய திட்டப் பணிகளுக்குகான கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தல்**

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை, அருணாசலேசுவரர் திருக்கோயிலில் 68.29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணி, பக்தர்கள் காத்திருப்பு கூடம் மற்றும் அருளாளர் அருணகிரிநாதர் திருக்கோயில் அருகிலுள்ள இடத்தில் சொற்பொழிவு அரங்கம் கட்டும் பணிகள்; விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர், நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயிலில் 12.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோயில் விமானங்களில் இரவு நேரங்களில் ஒளிரூட்டும் வகையில் மின் விளக்குகள் பொருத்தும் பணிகள், பக்தர்கள் தங்கும் விடுதி, வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் சுகாதார வளாகம் கட்டும் பணிகள்; இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம், இராமநாதசுவாமி திருக்கோயிலில் 9.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயி லின் இரண்டாம் பிரகாரம் முழுவதுமுள்ள சிமெண்ட் மற்றும் செராமிக் தளங்களை அப்புறப்படுத்தி புதிதாக தளவரிசை கற்கள் அமைத்தல் மற்றும் திருக்கோயிலின் மூன்றாம் பிரகார பக்கப் பகுதியில் உள்ள சிமெண்ட் தளங்களை அப்புறப்படுத்தி புதிதாக தளவரிசை கற்கள் அமைக்கும் பணிகள்;

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம், அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் 8.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயில் முழுவதும் வண்ண விளக்குகளால் ஒளிரூட்டும் பணி; திருவானைக் காவல், ஜெம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோயிலில் 5.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; சென்னை மாவட்டம், வில்லிவாக்கம், அகத்தீஸ்வர சுவாமி திருக்கோயிலில் 5.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அன்னதான மண்டபம் மற்றும் பக்தர்கள் ஓய்வு மண்டபம் கட்டும் பணிகள்; தேனி மாவட்டம், வீரபாண்டி கௌமாரியம்மன் திருக்கோயிலில் 4.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம் கட்டும் பணி;



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.08.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 124 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12 திருக்கோயில்களில் 17 புதிய திட்டப் பணிகளுக்கான கட்டுமானப் பணிகள் மற்றும் 32 கோடியே 53 இலட்சம் மதிப்பீட்டில் ஆயிரம் ஆண்டுகள் பழமையான 9 திருக்கோயில்களை அதன் பழமை மாறாமல் புனரமைக்கும் வகையிலான திருப்பணிகளையும் தொடங்கி வைத்து, 51 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் 11 திருக்கோயில்களில் 14 முடிவுற்ற பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, பொ.ஜெயராமன், தனி அலுவலர் (ஆலய நிலங்கள்) திருமதி சு.ஜானகி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மாவட்டம், புரசைவாக்கம், கங்காதரேசுவரர் திருக்கோயி லில் 3.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணியாளர் மற்றும் அர்ச்சகர்கள் குடியிருப்பு கட்டும் பணி; இராயப்பேட்டை, சித்தி புத்தி விநாயகர் மற்றும் சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் 2.64 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; திண்டுக்கல் மாவட்டம், பழநி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் 2.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சித்த மருத்துவக் கல்லூரி சுற்றுச்சுவர் கட்டும் பணி; சென்னை, மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயிலில் 1.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயில் முழுவதும் வண்ண விளக்கு களால் ஒளிரூட்டும் பணி; திருவண்ணாமலை மாவட்டம், அ.கோ.படைவீடு, ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயிலில் 1.29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணி;

என மொத்தம் 124 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 17 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**ஆயிரம் ஆண்டுகள் பழமையான 9 திருக்கோயில்களை புனரமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தல்**

மன்னர்களாலும், நமது முன்னோர்களாலும் கட்டப்பட்டு திராவிட கட்டடக் கலையின் பொக்கிஷங்களாக திகழும் தேவாரம் பாடல் பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருக்கோயில்கள், இதர திருக்கோயில்களின் கட்டடக் கலை மற்றும் கல்வெட்டுகளின் அடிப்படையில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களாக 714 திருக்கோயில்கள் கண்டறியப்பட்டு, அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து பாதுகாத்திடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2022-2023 ஆம் நிதியாண்டு முதல் கடந்த நான்கு நிதியாண்டுகளில் 425 கோடி ரூபாயினை அரசு நிதியாக வழங்கியுள்ளார்.

அரசு நிதி, உபயதாரர் நிதி, பொதுநல நிதி மற்றும் திருக்கோயில் நிதி என மொத்தம் ரூ.571.55 கோடி மதிப்பீட்டில் ஆயிரம் ஆண்டுகள் பழமையான 352 திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்து கொள்ளப்பட்டு, இதுவரை 65 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நிறைவு பெற்றுள்ளன. இவற்றில் தஞ்சாவூர் மாவட்டம், துக்காச்சி ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயிலுக்கு தொன்மை மாறாமல் புனரமைத்து பாதுகாத்தமைக்காக 2024-ஆம் ஆண்டிற்கான யுனஸ்கோ விருது வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோயில் களான திருநெல்வேலி மாவட்டம். களக்காடு சத்தியவாகீஸ்வரர் திருக்கோயில் 8.48 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம், பெருமுக்கல், காமாட்சியம்மன் திருக்கோயில் 7.63 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான், கைலாசநாதசுவாமி திருக்கோயில் 4.16 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், வேலூர் மாவட்டம், பள்ளிகொண்டா உத்திர ரங்கநாத சுவாமி திருக்கோயில் 2.96 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம், திருமோகூர், காளமேகப்பெருமாள் திருக்கோயிலுக்கு 2.81 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், விருதுநகர் மாவட்டம், கல்விமடை திருநாகேஸ்வர முடையார் திருக்கோயில் 2.10 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், புதுக்காமூர் புத்திர காமேஸ்வரர் திருக்கோயில் 1.56 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், கிருஷ்ணகிரி மாவட்டம், அத்திமுகம், ஐராதீஸ்வரர் மற்றும் அழகேஸ்வரர் திருக்கோயில் 1.31 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம், சோழவந்தான், ஜெனகை நாராயணப்பெருமாள் திருக்கோயில் 1.52 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் என மொத்தம் 32.53 கோடி மதிப்பீட்டில் 9 திருக்கோயில் களை அதன் பழமை மாறாமல் புனரமைக்கும் பணிகளை முதலமைச்சர் அவர்கள் நேற்று (22.8.2025) தொடங்கி வைத்தார்.

**11 திருக்கோயில்களில் 14 முடிவுற்ற கட்டுமானப் பணிகளை திறந்து வைத்தல்**

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 26.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நிர்வாக

கட்டடம் B, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், சுகாதார வளாகம் - 2; மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம், சுப்பிர மணியசுவாமி திருக்கோயிலில் 6.50 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்ட லட்சுமி தீர்த்தக் குளம்; சென்னை மாவட்டம், மாதவரம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் 3.17 கோடி ரூபாய் செலவில் புதிதாக உருவாக்கப்பட்ட திருக் குளம்; கோவை மாவட்டம், ஆனைமலை, மாசாணியம்மன் திருக்கோயிலில் 3.15 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் ஓய்வு மண்டபம் மற்றும் வரிசைத் தடுப்புகள்;

சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை, காரணீஸ்வரர் திருக்கோயிலில் 2.27 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு; மயிலாப்பூர், திருவள்ளு வர் திருக்கோயி லில் 2.05 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு; திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் மகாமாரியம்மன் திருக்கோயிலில் 1.93 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முடிகாணிக்கை மண்டபம்; இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம், இராமநாதசுவாமி திருக்கோயில் சார்பில் நடத்தப்படும் ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்மன் பெண்கள் மேல்நிலை பள்ளியில் ரூ.1.70 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடம்; திண்டுக்கல் மாவட்டம், பழநி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 1.22 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பஞ்சாமிர்த கூடம்; கோவை மாவட்டம், மருதமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 1.60 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வசந்த மண்டபம்; ஈரோடு மாவட்டம், தங்கமேடு, தம்பிக்கலை ஐயன்சுவாமி திருக்கோயிலில் 1.10 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம்;

**என மொத்தம் 51.19 கோடி ரூபாய் செலவிலான 14 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் அவர்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.**

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, பொ.ஜெயராமன், தனி அலுவலர் (ஆலய நிலங்கள்) திருமதி சு.ஜானகி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் தக்கார் ஆர். அருள்முருகன், திருச்செந்தூர் நகரமன்றத் தலைவர் திருமதி சிவ ஆனந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்களும், திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

## பிறப்பால் தமிழராக இருக்கலாம்; ஆனால் உணர்வால் நிச்சயம் இல்லை!

டாக்டர் வா.மைத்ரேயன்,
நாடாளுமன்ற
மாநிலங்களவை
முன்னாள் உறுப்பினர்.



இந்தியக் குடியரசு துணைத் தலைவருக்கான தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளராக தமிழ்நாட்டைச் சேர்ந்த சி. பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் அறிவிக்கப்பட்டு இருக்கிறார்.

பாஜக ஆட்சியில் இருந்த 1998 2004 ல் ஆறாண்டுகள் கோவை நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராக இருந்தவர் சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள். இந்த காலகட்டத்தில் தமிழ்நாட்டிற்கு அவர் என்ன செய்தார் என்றால், ஒன்றும் செய்யவில்லை என்பது தான் உண்மை. கச்சத்தீவு, முல்லைப் பெரியாறு, காவிரி நதிநீர் பங்கீடு, கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வருவது, அதிக நிதிப் பகிர்வு கோருதல் என தமிழ்நாட்டின் முக்கியமான பிரச்சினைகளுக்கு அவர் மக்களவையில் குரல் கொடுத்ததில்லை என்பதுதான் யதார்த்தம். இப்படி தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக குரல் கொடுக்காத சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிப்பது தமிழ்நாட்டிற்கு எதிரான செயல்.

இன்றைய காலகட்டத்தில் தமிழ்நாட்டிற்கு வரும் நிதிப் பகிர்வு வெகுவாக குறைந்திருக்கிறது. கல்வி நிதி மறுக்கப்படுகிறது.தொகுதி மறுவரையில் தமிழ்நாட்டுக்கான மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை குறையப் போவதாக கூறப்படுகிறது. வக்ப் வாரியத்தின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து துன்புறுத்தப்படுகிறார்கள். மும்மொழிக் கொள்கையை திணிக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படுவது தாமதப்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டிற்குத் தேவையான பேரிடர் நிவாரண நிதி வழங்கப்படவில்லை. கீழடி ஆய்வை காக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தப் பிரச்சினைகளுக்காக சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் ஏதாவது குரல் கொடுத்தாரா என்றால் நிச்சயம் இல்லை. மாறாக, ஆளும் பாஜக நிலைப்பாட்டை ஆதரித்துப் பேசியவர். இப்படிப்பட்டவருக்கு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிப்பது தமிழ்நாட்டு மக்களுக்கு எதிரான செயல்.

ஆளுநர் பதவி என்பது அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு பதவி. பொதுவாக ஆளுநராக பொறுப்பேற்றுக் கொண்டு விட்டால் அரசியல் பேசுவதைத் தவிர்ப்பார்கள். ஆனால் இதற்கு முற்றிலும் முரணானவர் சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள். ஆளுநர் பொறுப்பு ஏற்றுக் கொண்ட திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அரசியல் பேசுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார். பாஜக சித்தாந்தத்திற்கு ஆதரவாகப் பேசியவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன். இந்தியக் குடியரசு துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுபவர்தான் நாடாளுமன்ற மாநிலங்களவைத் தலைவர் பதவியையும் வகிப்பார் என்ற நிலையில், சித்தாந்த ரீதியாக செயல்படும் சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் நடுநிலையாக செயல்படுவார் என்று நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது. நடுநிலையை கடைபிடிக்காத ஒருவரை இந்தியக் குடியரசு துணைத் தலைவராக தேர்ந்தெடுப்பது ஜனநாயகத்திற்கு எதிரான செயல்.

2024 ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணி சார்பில் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திமுகவிற்கு நூறு விழுக்காடு வெற்றி கிடைத்தது. பாஜகவிற்கு எதிராக தமிழ்நாட்டு மக்கள் ஓரணியில் நின்று திமுக கூட்டணிக்கு வாக்களித்துள்ளனர். இந்த நிலையில் பாஜக சித்தாந்தத்தை பேசும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிப்பது என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு எதிரான செயல்.

புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தமிழர் என்ற சொல்லுக்கு மிக அழகான விளக்கம் அளித்துள்ளார்.

**எங்கு பிறப்பினும் தமிழர் தமிழரே;
இங்கு பிறப்பினும் அன்னியர் அன்னியரே.**

**சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் இங்கு பிறந்தாலும் அவர் அன்னியரே தவிர நம்மவர் அல்ல.**

**அவர் பிறப்பால் தமிழராக இருக்கலாம். ஆனால் உணர்வால் நிச்சயமாக இல்லை.**